**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU.V. VENKATESULU ROUGH STONE QUARRY, SF.NO.754 & 760 (Part 6), LEASE OVER AN EXTENT OF 4.00.0 HA, KAMANDODDI VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 05.08.2025 AT 11.00 AM M/s.GVM MAHAL, KURUBARATHAPALLI VILLAGE, SAPPADI POST, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. S.Thanajeyan | : | Sub Collector (i/c), Hosur (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. C.Muthuraj | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. A.JothiPrakash | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru. V. Venkatesulu | : | The Proponent, Thiru.V. Venkatesulu Rough Stone Quarry |
| 5 | Thiru.Uma maheshwaran | : | EIA Consultant, M/s. Geo Technical mining solutions, Dharmapuri |
| | Public | : | 85 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector(i/c), Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed Thiru.V. Venkatesulu Rough Stone Quarry, SF.No. 754 & 760 (Part 6), Lease over

an extent of 4.00.0 Ha, Kamandoddi Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinakaran" and "The New Indian Express" dated 02.07.2025 and pamphlets regarding public hearing were issued to the public of Kukkalapalli Village, Thirumalai Down Kotta Village, Krishnakothur Village and Kamandhoddi Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector(i/c), Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector(i/c), Hosur has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.Uma Maheshwaran, EIA Consultant, M/s. Geo Technical mining solutions, Dharmapuri of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer,

Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Mohana Kumar, Pillaikothur Village:**

Thiru. Mohan Kumar has said that the proposed quarry should give employment for nearby Village People.

**2. Thiru. Sasi Kumar, Thirumalaiyudankotta Village:**

Thiru. Sasi Kumar has said that there is no problem with the establishing of this proposed quarry project, and even though his land is located near the quarry there is no issues for operating the quarry and employment should also given for nearby Village People.

**3. Thiru. Ravi Kumar, Pillaikothur Village:**

Thiru. Ravi Kumar has said that water should be sprinkled on the roads using sprinklers during the movement of trucks and tree saplings should be planted and maintained on sides of the quarry road.

**4. Thiru. Rajaram, Kukalapalli Village:**

Thiru. Rajaram has informed that many people will get an employment from this proposed quarry project, and this will improve the standard of living in this village.

**5. Thiru. Subramani, Thirumalaiyudankotta Village:**

Thiru. Subramani has stated that this proposed project will bring benefits to his village temple and he welcomed this proposed quarry project.

**6. Thiru. Gopalachari, Thirumalaiyudankotta Village:**

Thiru. Gopalachari has objected the establishment of this quarry in the kamandoddi village since the effect of blasting, will cause cracks on the wall. He

also said that the nearby mango and guava plant around 3 acers will also be affected by the dust emanated from the quarry. Further He also said that the quarry have also encroached the lake.

**7. Thiru. Sathish, NGO:**

Thiru.Sathish requested the Government to immediately accept the public requests and to take action, and to ensure that the village's sustainable greenery remains unchanged.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 11 number of petitions were received on the proposed Thiru.V. Venkatesulu Rough Stone Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation not received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project and no email representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | | |
|---|---|---|
| 21/8/25 | 21/8/2025 | 25/8/25 |
| **District Environmental Engineer** | **Sub Collector(i/c)** | **District Collector** |
| **Tamilnadu Pollution Control Board** | **Hosur** 3/7 | **Krishnagiri** 3/7 |
| **Hosur** | | |

**திரு.வெ. வெங்கடேசுலு ரப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண். 754 & 760 (பகுதி 6), காமன்தொட்டி கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 4.00.0 ஹெக்டேர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 05.08.2025 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், சப்படி அஞ்சல், குருபரத்தப்பள்ளி கிராமத்தில், தி/ள். GVM மஹால் – இல் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.சா.தனஞ்செயன் | : | சார் ஆட்சியர்(பொ), ஓசூர்<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.செ.முத்துராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.அ.ஜோதி பிரகாஷ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு. V. வெங்கடேசலு | : | உரிமையாளர்<br>திரு.வெ. வெங்கடேசுலு ரப் ஸ்டோன் குவாரி |
| 5 | திரு. G. உமா மகேஷ்வரன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள். ஜியோடெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி |
| | பொதுமக்கள் | : | 85 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு.வெ. வெங்கடேசுலு ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் திரு.வெ. வெங்கடேசுலு ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான தினகரன் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்

ஆகிய நாளிதழ்களில் 02.07.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், காமன்தொட்டி கிராமம், குக்கலப்பள்ளி கிராமம், திருமலைடவுன்கோட்ட கிராமம், கிருஷ்ணாகொத்தூர் கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர், திரு.வெ. வெங்கடேசுலு ரப் ஸ்டோன் குவாரி உரிமையாளரை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திரு.வெ. வெங்கடேசுலு ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. G. உமா மகேஷ்வரன், தி/ள். ஜியோடெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது

மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு. மோஹனகுமார், பிள்ளைக்கொத்தூர் கிராமம்:**

திரு. மோஹனகுமார் அவர்கள், இக்குவாரி வருவதால் உள்ளூர் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

2. **திரு. சசிகுமார், திருமலைடவுன்கோட்ட கிராமம்:**

திரு. சசிகுமார் அவர்கள், இக்குவாரி வருவதில் ஆட்சேபனை இல்லையென்றும், இக்குவாரி அவர் நிலத்தின் அருகில் உள்ளதாகவும் கூறினார். மேலும், இக்குவாரி திட்டத்தின் மூலம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

3. **திரு. ரவிக்குமார், பிள்ளைக்கொத்தூர் கிராமம்:**

திரு. ரவிக்குமார் அவர்கள், சாலையில் குவாரியின் கனரக வாகனங்கள் செல்லும் போது தண்ணீர் தெளித்து இயக்கவேண்டுமென்றும், குவாரியை சுற்றி மரக்கன்றுகள் நடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

4. **திரு .ராஜாராம், குக்கலப்பள்ளி கிராமம்:**

திரு. ராஜாராம் அவர்கள், இக்குவாரி வருவதினால் எவ்வித பிரச்சனையும் இல்லையென்றும், உள்ளூர் மக்களுக்கு வேலை கிடைக்குமென்றும் அதனால் பல குடும்பங்கள் முன்னேறும் என்று கூறினார்.

5. **திரு. சுப்பிரமணி, திருமலைடவுன்கோட்ட கிராமம்:**

திரு. சுப்பிரமணி, அவர்கள் இக்குவாரி வருவதில் ஆட்சேபனை இல்லையென்றும், இவர்கள் கோவில் கட்ட உதவி புரிவதாகவும் தெரிவித்துள்ளார்.

6. **திரு. கேபாலச்சாரி, திருமலைடவுன்கோட்ட கிராமம்:**

திரு. கேபாலச்சாரி அவர்கள், இக்குவாரி வருவதில் எங்களுக்கு ஆட்சேபனை இருப்பதாகவும் இக்குவாரி அருகில் தான் தன்னுடைய விவசாய நிலத்தில் கொய்யாமரம், மாமரம் மூன்று ஏக்கரில் உள்ளதாகவும் இக்குவாரி வருவதால் அது பாதிப்பு அடையும் என்றும் கூறினார். மேலும், இக்குவாரியில் வெடி வைப்பதால் வீடுகளில் விரிசல் ஏற்படுவதாகவும், குவாரியிலிருந்து வெளியாகும் தூசி விவசாய நிலத்தில் படிவதாகவும். இக்குவாரி வருவதினால், அருகில் உள்ள காடுகளுக்கு பாதிப்பும் ஏற்படுமென்றும், மேலும் இவர்கள் ஏரியை ஆக்கிரமித்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

7. **திரு. சதிஷ், தன்னார்வ தொண்டு நிறுவனர்:**

திரு. சதிஷ் அவர்கள், பொது மக்கள் கோரிக்கைகளை அரசாங்கம் உடனடியாக ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், இவ்வூர் நிலையான பசுமை தன்மை மாறாது. இதேபோல், இருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.வெ. வெங்கடேசுலு ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 11 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு.வெ. வெங்கடேசுலு ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு எவ்வித மனுக்களும் வரப்பெறவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| [signature] 21/8/25 | [signature] 21082025 | [signature] 25/8/25 |
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>ஓசூர் | சார் ஆட்சியர் (பொ)<br>ஓசூர் 6/7 | மாவட்ட ஆட்சியர்<br>கிருஷ்ணகிரி 6/7 |